**+2 வணிகவியல் ஆண்டு இறுதித் தேர்வு மார்ச் - 2026**

**சரியான விடை 20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1. (ஆ) 1960 | ஆ) பொருள் |
| 2.அ) குறியிலக்கு மேலாண்மை | ஈ)இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் |
| 3. (ஈ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் | ஈ) மேற்காண் அனைத்தும் |
| 4. (அ) நுகரும் உரிமை | ஆ) 1960 |
| 5.இ)ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தை | .ஈ) உட்புற சூழல் மற்றும் வெளிப்புற சூழல் |
| 6. (ஈ) குழுக்கூட்டம் | ஈ) மேலே உள்ள அனைத்தும் |
| 7. **(அ) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுக்கு காரணம் சரியான விளக்கம்** | (ஈ) குழுக்கூட்டம் |
| 8. (இ) அக வள | (இ) அமைப்பு பணி |
| 9. ஈ) டேலர் | .ஈ) 24 |
| 10. (அ) பண்டமாற்று முறை | அ) நுகரும் உரிமை |
| 11.ஈ) உட்புற சூழல் மற்றும் வெளிப்புற சூழல் | .இ) பல முறை |
| 12.இ) பல முறை | ஆ) காசோலை |
| 13. ஈ)மேலேஉள்ள அனைத்தும் | அ) குறியிலக்கு மேலாண்மை |
| 14.(அ) எதிர்மறை | இ)ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தை |
| 15. (ஆ) பொருள் | **(அ) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுக்கு காரணம் சரியான விளக்கம்** |
| 16 .ஈ) 24 | இ) அக வள |
| 17. (ஈ) தனியார்மயமாக்கல் | அ) பண்டமாற்று முறை |
| 18. (இ) அமைப்பு பணி | ஈ) டேலர் |
| 19.ஈ) மேற்காண் அனைத்தும் | அ) எதிர்மறை |
| 20.(ஆ) காசோலை | ஈ) தனியார்மயமாக்கல் |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மைக் கருவிகளை பட்டியலிடுக** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**22. அரசுப்பத்திரங்கள் சந்தை** அரசு அல்லது தங்கமுனை பத்திரங்கள் வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு அரசுபத்திரங்கள் என்று பெயர்.

**23. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.** பங்குச் சந்தைகளை ஒழுங்குப்படுத்துவது, முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாப்பது.

**24. மின்னணு கற்றல் முறை:** மின்னணு கற்றல் முறை என்பது பாரம்பரிய பயிற்சி வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில் நுட்ப செயல்முறையில் கற்றுக் கொள்வதாகும்.

**25. பசுமைச் சந்தையிடுதல்:** சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதை பசுமைச் சந்தைப்படுத்தல் எனப்படும்.

**26. உலகமயமாக்கலின் ஏதேனும் இரண்டு நன்மைகள்:** வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல். சந்தை விரிவாக்கம். தொழில்நுட்ப வளர்ச்சி

**27. வேளாண் தொழில் முனைவோர்:** வேளாண் பொருட்களை விளைவித்து நேரடியாகவோ அல்லது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவும் சந்தையிடும் பணியை மேற்கொள்பவர் ஆவர்.

**28. குறைவெண்:** ஒரு தனிநபர் கூட்டமாக முடியாது. ஒரு நிறும கூட்டத்ததை கூட்டுவதற்கு குறைந்தளவு நபர்களாவது தேவை. அத்தகைய குறைந்தளவு நபர்களின் எண்ணிக்கையை குறைவெண் ஆகும்

**29. விலை செலுத்தப்பெறா வணிகர்:** விற்ற பொருளின் விலை முழுவதும் செலுத்தப்படாவிட்டாலும் அல்லது விற்ற பொருளுக்ககாக வாங்குனர் கொடுத்த காசோலை அல்லது மாற்றுச்சீட்டு அவமதிக்கப்படும்போது விற்றவர் விலைபெறாத விற்குநராகக் கருதப்படுகிறார்

**30. ஊக வணிகம்:** குறிப்பிடத்தக்க வருவாய்கள் எதிர்பபார்ப்பில், அதிக இடர்பாடு கொண்ட சம்பந்தப்பட்ட நிதி கருவிகளை வர்த்தகம் செய்வது என்பது ஊக வணிகம் ஆகும்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கப்படும்?** அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், கையேடுகள், செய்தி மடல்கள், அறிவுப்பு பலகைகள், கூட்டம், பங்கேற்ப்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

**32. கருவூல இரசீதின் பொது இயல்புகள்** வெளியிடுபவர், நிதி இரசீது, நீர்மைத் தன்மை, முக்கிய ஆதாரம், பண மேலாண்மை

**33. புறத்தோற்ற மற்ற பத்திரங்கள்** முதலீட்டாளார்களின் விருப்பத்திற்கேற்ப நிறுவனப் பதிவாளரால் காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து பின்னர் அதற்கு சமமான பத்திரங்கள் முதலீட்டாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். இதுவே புறத்தோற்ற மற்ற பத்திரங்கள் எனப்படும்.

**34. மன அழுத்த நேர்காணல்:** விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையில் கேள்விகள் கேட்கப்படும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.

**35. மின் சந்தைப்படுத்துதலின் நன்மைகள்:-**

**அனைத்து நேரத்திலும் சந்தை:-** மின் சந்தை வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரத்திலும் (24 x 7) பயனாளிகளுக்கு சந்தை வசதியை அளிக்கிறது.

**நேரடித் தொடர்பு:-** தயாரிப்பாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுவதால் செலவுகள் குறைக்கப்படுகிறது.

**தேவையை பெறுதல்:-** நுகர்வோர் தங்களுக்கு தேவைப்படும் எத்தகைய பொருள்களையும் மற்றும் சேவைகளையும் மின் சந்தையில் பல்வேறு தளங்கள் வலைப்பக்கங்கள் மூலம் பெறலாம்.

**36. நுகர்வோரியல் குறித்து இயற்றப்பட்ட முக்கியச் சட்டங்கள் யாவை? (ஏதேனும் 3)**

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம்:- 1955

உணவுப் பாதுகாப்பு தரச்சட்டம்:- 2006

உணவுப்பொருட்கள் கலப்படத்தடைச்சட்டம்:- 1954

**37. புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி சிறு குறிப்பை எழுதுக.** உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது. அவை. தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல். இவை LPG என அழைக்கப்படுகிறது

**38. மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்கள்** தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை தங்களின் அறிவு ஆற்றல், வல்லமையை வைத்துக் கொண்டு வேறு முறையில் வடிவமைப்பவர்கள். இவர்கள் மேலை நாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்கள் தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

**39. வைரல் (பரவும்) சந்ததையிடுதல்:** ஒரு நபர் சந்தை (அ) பொருள்பற்றிய விவரங்களை மற்றவருக்கு அனுப்புவார். அச்செய்தி தொற்றுக்கிருமி பரவுவதைப்போல் ஒருவரிடமிருந்து பல நபர்களுக்கு மிகவிரைவாக பரவி ஒரு பொருள் அல்லது பிராண்டுக்ககாண விற்பனை அதிகரிக்கும் வகையில் சந்தையிடும் முறையை வைரல் (பரவும்) சந்ததையிடுதல் என்கிறோம்.

**40. "நவரத்னா நிறுமங்கள்" (ஏதேனும் 3)**

1. பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் 2. கன்டெய்னர் கார்ப்பரேசன் ஆ.ஃ.ப் இந்தியா 3. பொறியாளர்கள் இந்தியா லிமிடெட் 4. இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் 5. இந்துஸ்ததான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் 6. மகாநகர் தொலைபேசி நிஜம் லிமிடெட் 7. தேசிய அலுமினியம் நிறுமம்
8. தேசிய கட்டிட கட்டுமான கழகம்
9. தேசிய கனிம மேம்பாட்டு கழகம்
10. நெய்வேலி லிக்னனைட் கார்ப்பரேசன் லிமிடெட்
11. ஆயில் இந்தியா லிமிடெட்
12. பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேசன்
13. பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆ.ஃ.ப் இந்தியா லிமிடெட் 14. ராஷ்ட்ரிய இஸ்பபாட் நிகாம் லிமிடெட் 15. கிராம மின்சாரமயமாக்கல் கார்ப்பரேசன் 16. கப்பல் கார்ப்பரேசன் ஆ.ஃ.ப் இந்தியா

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) மேலாண்மையின் பல்வேறு முக்கியப் பணிகளைக் கூறி விளக்குக.**

**திட்டமிடல்:-** முன் கூட்டியே முடிவெடுத்தல்.
வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

**ஒழுங்கமைத்தல்:-** உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல்.
பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.

**பணி அமர்த்துதல்:-** பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.
குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல். பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)

**இயக்குவித்தல்** இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல்
கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.

**ஒருங்கிணைத்தல்:-** பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.
அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

**41.ஆ) இயக்குனரின் பல்வேறு வகைகள்**

**இந்திய குடியுரிமை இயக்குனர்:-** இயக்குனர் கடந்த ஆண்டு காலத்தில் குறைந்தது 182 நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும்.

**பெண் இயக்குனர்:** ஒரு இயக்குனர் குழுவில் குறைந்த பட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

**மாற்று இயக்குனர்:-** ஒரு இயக்குனர் இந்தியாவில் குறைந்தது மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால் அவருக்கு பதிலாக நியமிக்கப்படுபவர்.

**கூடுதல் இயக்குனர்:-** ஒரு தனிமனிதனை தேவைப்பட்டால் கூடுதல் இயக்குனராக நியமிக்கலாம்.

**நிழல் இயக்குனர்:-** இயக்குனர் குழுவில் இடம் பெறாத ஒருவர் ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர்.

**42.அ)வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகள்:**

**நிதி அளிப்பவர்:-** வணிகம் சிறந்த முறையில் இயங்க முக்கிய பங்கு வகிப்பவர்கள் கடனீட்டு பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகும்.

**சரக்கு விற்பனையாளர்கள்:-** சரக்கு விற்பனையாளர்களின் முக்கியத்துவத்தை நிறுவனங்கள் உணர்ந்து அவர்களுடன் நல்ல உறவை வளர்க்க வேண்டும்.

**சந்தையிடுகைஇடைநிலையர்கள்:**-இவர்கள் நிறுவனத்தையும், நுகர்வோரையும் இணைக்கும் பாலமாக திகழ்கின்றனர்.

**வாடிக்கையாளர்கள்:-** வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார். வியாபாரத்தின் நோக்கம் அதன் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றுவதாகும்..

**போட்டியாளர்கள்:-** அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**42.ஆ) பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:**- ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.

**43.அ)மனிதவள மேலாண்மையின் செயல் பணிகள்**

**திரட்டுதல்:-** ஆட்சேர்ப்பு, தேர்வு, வேலைவாய்ப்பு, பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றின் மூலம் மனித வளத்தை திரட்டுதல்.

**வளர்ச்சி:-** நிறுவன வளர்ச்சியை இது உள்ளடக்கி அபிவிருத்தி செய்வதாகும்.

**ஊதியம்:-** இது வேலை மதிப்பீடு, ஊதியம் மற்றும் சம்பளம், ஊக்கத் தொகை, மேலூதியம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**ஊழியர்களை தக்க வைத்துக் கொள்ளுதல்:-** சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலன், சமூக பாதுகாப்பு, தரம் மற்றும் வேலை திருப்தி மூலம் இது சாத்தியமாகிறது.

**ஒருங்கிணைத்தல்:** தனிப்பட்ட விருப்பிற்கும் நிறுவன விருப்பிற்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உள்ள செயல்பாடுகளை இச்சொல் குறிக்கிறது.

**43.ஆ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**44.அ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

**முறையான (செம்மையான சந்தை):-** இவ்வகை சந்தையில் ஒரே தன்மைக் கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரே விதமான விலையில் கையாளப்படுகிறது.

**முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை:-** இவ்வகை சந்தை பல்வகைப் பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது. ஒரே தன்மை மற்றும் விலை கொண்ட பொருட்கள் இச்சந்தையில் இடம் பெறாது.

**44.ஆ) நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக.**

**விலைஉயர்வை தவிர்த்தல்:-** வணிகநிறுவனங்கள் பொருட்கள் நியாயமான விலையில் விற்க வேண்டும்.

**பதுக்கலைதவிர்த்தல்:-** செயற்கைப்பற்றாக்குறை ஏற்படுத்தும் விதமாக பொருட்களை பதுக்கி வைக்க வேண்டும்.

**தரத்திற்கு உத்திரவாதம் அளித்தல்:-** பொருட்களின் தரமோ, அளவோ குறையாத வண்ணம் நுகர்வோருக்கு அளிக்க வேண்டும்.

**பொருட்கள் குறித்த தகவல் அளித்தல்:-** வணிக நிறுவனங்கள் தங்கள் நிறுவனம் பொருட்களின் உண்மையான விவரங்களை நுகர்வோருக்குத் தரவேண்டும்.

**விளம்பரத்தில் உண்மை:-** விளம்பரங்களில் பொய்த் தகவல்களோ, மிகைப்படுத்தலோ இன்று நேர்மையான தகவல்களைத் தர வேண்டும்.

**45.அ) LPG- யின் சிறப்பு அம்சங்கள்:**

புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.

வணிகக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

பல்வேறு பொருள்களுக்கு புதிய சந்தை வாய்ப்பை உருவாக்கியது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குகிறது.

நுகர்வோர் பொருட்களின் சந்தையை பெருக்கிட உதவியது.

**45.ஆ)விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகள்:**

**இரு தரப்பினர்:-** விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் மற்றும் விற்பவர் உள்ளனர்.

**பொருளின் மீதான உரிமை மாற்றம்:-** விற்பவர் பொருளின் மீதான உரிமையை மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தர வேண்டும்.

**சரக்கு:-** அசையும் சொத்துக்கள் அனைத்தும் சரக்கு ஆகும். (எகா:-. பங்குகள், நற்பெயர்)

**விலை:-** பொருளின் விற்பனைக்கான மறுபயனே விலை ஆகும்.

**விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு:-** பொருட்களின் உரிமை உடனே மாற்றினால் அது விற்பனையாகும். பொருட்களின் உரிமையை எதிர்காலத்தில் மாற்றுவது விற்பனை உடன்பாடாகும்.

**46.அ) மென் பண்டகம்** என்பது பொதுவாக விவசாயம் சார்ந்த முதல் நிலைப் பொருட்கள் ஆகும். உதாரணம்: கோதுமை, பருத்தி, சர்க்கரை மற்றும் குளம்பி / காபி

**தேசிய தீர்வக மற்றும் களஞ்சிய அமைப்பு: (NCDS)** பங்கு மாற்றங்கள் அமைப்பு மற்றும் தீர்வைகள் முகமை அமைப்புகளின் அதிகளவு பணிச்சுமை காரணமாக ஏற்படும் தவறுகளை சரிசெய்வதற்காகவும் விரைவாக பிரச்சனைகளை தீர்ப்பதற்ககாகவும் ஏற்படுத்தப்பட்டதே இந்த அமைப்பாகும். போலியான உத்தரவாதம், கடன் இடர், மோசமான வழங்கல்கள், மிகவும் கால தாமதமான வழங்கல்கள் ஆகியவையே பிரச்சனைகள் ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

**46.ஆ) சந்தையிடுகையாளரின் பணிகள்**

i. சந்தை பற்றிய தகவல்களை சேகரித்து அதனை ஆராய்தல் ii. சந்தை திட்டமிடுதல்

iii. பொருட்களை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துதல். iv. பொருட்களை வகைப்படுத்துதல் மற்றும் தரப்படுத்தல்.

v. கட்டுமானம் செய்தல் மற்றும் பெயரிடல் vi. வர்த்தக குறியீடு செய்தல். vii. வாடிக்கையாளர் சேவை தொடர்பான ஆதரவு அளித்தல்.

viii. பொருளுக்கான விலை நிர்ணயம் செய்தல்.

ix. விற்பனை அளவினை மேம்படுத்துதல்

x. வழங்கல் வழியினை ஏற்படுத்துதல்

xi. போக்குவரத்து நடவடிக்கைகளை கையாளுதல் xii. பொருட்களை சேமித்தல் மற்றும் பண்டககாப்பு செய்தல் போன்ற அனைத்து பணிகளையும் சந்ததையிடுகையாளர் செய்து வருகின்றார்.

| 47 அ. பங்குகள் | கடன் பத்திரங்கள் |
|---|---|
| பங்கு முதலில் ஒரு பங்கு | இது ஒரு கடன் ஆவணம் |
| பங்குகளை வைத்திருப்பவர் உரிமையாளர் | கடன்பத்திரங்களைவைத்திருப்பவர் கடனீந்தோர் |
| பங்காதாய வீதம் மாறக்கூடியது | வட்டிவீதம் நிலையானது |
| வாக்களிக்கும் உரிமை உண்டு | வாக்களிக்கும் உரிமை இல்லை |
| சில நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடியில் வெளியிட முடியும் | கடன்பத்திரங்களை தள்ளுபடியில் வெளியிடலாம் |

**47.ஆ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி**

**அறிவின் தொகுப்பு:-** தற்போது மேலாண்மை உயர் தனிச்சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது.

**மேலாண்மைக் கருவிகள்:-** கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பெருகி விரிவடைந்துள்ளது. **தனிப்பாடப் பிரிவுகள்:-** பல்வேறு பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப் பிரிவாகப் அங்கீகரித்திருக்கின்றன.

**சிறப்பீடுபாடு:-** மேலாண்மை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் மேலாண்மை சிறப்புத் தொழிலாளர்களுக்கு சாதகமான அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மனப்பாங்கு தற்போது அதிகரித்து வருகின்றது.

**நடத்தை விதி:-** வாங்குவோர் ஜாக்கிரதை என்ற கோட்பாடு சந்தையில் நீண்டகாலம் நீடிக்காது. தற்போது வாங்குவோர் எச்சரிக்கை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக விற்பவர் ஜாக்கிரதை என்ற சந்தை நடைமுறைகளை தீர்மானிக்கிறது.

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com